1971 ஜூலை 28]

அரசு ஊழியர்களுக்கு மருத்துவப்படி

* 509 வினு—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுப்படி (Medical Allowance) வழங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவுப்படி வழங்கும் திட்டம் இல்லை. ஆகவே, அந்தக் கேள்வி எழவில்லை.

(இ) மருத்துவச் செலவுப்படி வழங்கும் திட்டம் இல்லாமலே இப்போது அரசாங்கம் ஊழியர்களின் நிலைமைக்கேற்ப மருத்துவச் செலவு நிதி வழங்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்களில் சிலர் தான் இந்த மருத்துவப் படியை பெறுகிறார்கள். அதாவது டாக்டரிடத்தில் சென்று மருந்து வாங்கி, அதற்கான செலவை அரசாங்கத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். இதை வாய்ப்புள்ள சிலர்தான் பெற்றுக் கொள்கிறார்கள். வாய்ப்பு இல்லாதவர்கள் அதைப் பெற முடியவில்லை. ஏனெனில் அங்கே ஆதரைஸட் மெடிகல் அட்டெண்டெண்ட் இருப்பது இல்லை. ஆகவே சராசரியில் அரசாங்கமே செலவைப் பங்கிட்டு ஒரு அரசாங்க ஊழியருக்கு ரூ. 5-10 என்று கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர்வர்களே, இது ஒரு தவருன கருத்து. நோய் சராசரியாக வருவது இல்லை. பாதிக்கப்படுபவர்களுக்கு ஆகும் செலவையும் சராசரியாகக் கணக்கிட்டுக் கொடுக்க முடியாது. வியாதியின் அளவையும் சராசரியாகத் தீர்மானிக்க முடியாது. செலவையும் சராசரியாகக் கணக்கிட முடியாது. இந்த அரசாங்கம் நோயவாய்ப்படுபவர்களைச் சராசரியாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த மருத்துவ வசதி ஓய்வு பெற்ற சர்க்கார் ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதே, அது அமுல் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குறிப்பு இப்போது இல்லை.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

* 510 வினு—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூரிலுள்ள, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்டுக்கும், அதன் தொழிலாளர் சங்கத்திற்குமிடையே, ஊதியங்கள், பூரிப்பூதியங்கள் ஆகியவை குறித்து 18—8—69 அன்று ஏற்பட்ட உடன்பாடு செயல்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில், அதன் காரணம் என்ன ?